M-3

# MODEL EXAMINATION

## மாதிரி வினாத்தாள் – 3

## பத்தாம் வகுப்பு – தமிழ்

**கால அளவு : 3 மணி** **மொத்த மதிப்பெண்கள் : 80**

**குறிப்பு** :

1.**கையெழுத்து தெளிவாக இருத்தல் வேண்டும்**.

2.**விடைகள் தெளிவாகவும் உரிய பக்க எண்களுடன் இருத்தல் வேண்டும்**.

3.**மாணவர்களின் அறிவுத்திறனுக்கு ஏற்ப சொந்த நடையில் பக்கத் தலைப்புகளுடன் கட்டுரை எழுதுதல் வேண்டும்**.

### பகுதி – அ

**I.அ. பின்வரும் உரைநடை பத்தியைப் படித்து கொடுக்கப்பட்ட பலவுள் தெரிவு செய் வினாக்களுக்கு ஏற்ற விடையை எழுதுக.** 5×1=5

"பத்து மிளகு இருந்தால் பகைவன் வீட்டிலும் உண்ணலாம் என்ற பழமொழி மிளகின் மகத்துவத்தை உணர்த்துகிறது. உலகிலேயே தலைசிறந்த தரம் வாய்ந்த மிளகு தென்னிந்தியாவில் மட்டுமே கிடைக்கிறது. மிளகில் உள்ள வேதிப் பொருட்கள் அனைத்தும் நம்மை நோயிலிருந்து காப்பது மட்டுமல்லாமல் உடலில் நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கச் செய்கின்றது. நல்ல மிளகில் பொட்டாசியம், துத்தநாகம், கால்சியம், மாங்கனீசு, இரும்புச்சத்து மற்றும் மெக்னீசியம், வைட்டமின் சி சத்துக்கள் அதிகம் உள்ள மிளகு வாதத்தை அடக்கும், பசியை தூண்டும், வெப்பத்தை குறைக்கும், கோழையை அகற்றும். பூச்சிக் கொல்லியாகவும் செயல்பட்டு நரம்புத் தளர்ச்சி மற்றும் ஞாபக சக்திக் குறைபாடு ஆகியவற்றுக்கும் நல்ல மிளகு சிறந்த மருந்தாகும். நல்ல மிளகில் உள்ள பிப்பெரின் என்ற அல்கலாய்டு பசியைத் தூண்டுகிறது. வயிற்றில் என்சைம்களை சுரக்க செய்து ஜீரணத் தன்மையை அதிகரிக்க துணைபுரிகிறது. நச்சுக் கழிவுகள் உடலில் தங்காது பாதுகாக்க வழிவகுக்கிறது.

வினாக்கள்

1. உலகிலேயே தரம்வாய்ந்த மிளகு எங்குக் கிடைக்கிறது?
   அ. அமெரிக்காவில் ஆ. கிழக்கு இந்தியாவில்
   இ. தென்னிந்தியாவில் இ. வட இந்தியாவில்
2. மிளகில் உள்ள பசியைத் தூண்டும் அல்கலாய்டு பெயர் என்ன?
   அ. பொட்டாசியம் ஆ. கால்சியம் இ. பிப்பிரின் ஈ. மெக்னீசியம்
3. மிளகின் மருத்துவ பயன் என்ன?
   அ. வெப்பத்தை அதிகரிக்கும் ஆ. நரம்புத் தளர்ச்சி அதிகரிக்கும்
   இ. ஞாபக சக்தியை குறைக்கும் ஈ. பசியைத் தூண்டும்
4. மிளகில் உள்ள வைட்டமின் சத்து எது?
   அ. வைட்டமின் ஏ ஆ.வைட்டமின் சி இ.வைட்டமின் டி ஈ.வைட்டமின் டி
5. பிப்பிரின் என்பது ஒரு____________
   ஆ.இரும்புச்சத்து ஆ.வேதிப்பொருள் இ.அல்கலாய்டு ஈ.வைட்டமின்

**(அல்லது)**

**ஆ. பின்வரும் உரைநடை பத்தியைப் படித்து கொடுக்கப்பட்ட பலவுள் தெரிவு செய் வினாக்களுக்கு ஏற்ற விடையை எழுதுக.** **5×1=5**

பறம்பு மலையை ஆண்ட பாரி போரில் மரணமடைந்த பிறகு பாரியின் நண்பரும் அறிவாளர் மான கபிலர், பாரியின் இரு மகள்களான அங்கவை சங்கவை ஆகியோரை அழைத்துக் கொண்டு பறம்பு மலையிலிருந்து வெளியேறுகிறார். பாரி மகளிரை திருமணம் செய்து கொள்ளும்படி எருமை நாட்டுத் துவரை நகரில் அரசாண்ட இருங்கோவேள் எனும் மன்னனை சந்திக்கிறார் கபிலர். எருமை நாடு என்பது இன்றைய மைசூர் ஆகும். எருடை நாடு என்பது தமிழ் பெயர் எருமை என்பதை வட மொழியில் மிகஷம் என்கின்றனர். மகிஷ நாடு, பின்னாளில் மைசூர் ஆனது. துவரை நகரம் எனச் சங்க இலக்கியங்கள் குறிக்கும் நகரம் இன்று மைசூர் அருகே உள்ள துவாரகா நகரமே ஆகும். எருமையூர் மைசூர் என்றாகி மைசூர் ஆனது போல துவரை நகரம், துவாரகா ஆகிவிட்டது. கபிலர் துவரையில் இருந்த வேளிர் பரம்பரையைச் சேர்ந்த இளங்கோவேளைச் சந்தித்து பார் மகளிரை ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகோள் வைக்கிறார்.

**வினாக்கள்**

1. துவரை நகரில் அரசாண்ட மன்னர் யார்?
   அ. பாரி ஆ.கபிலர் இ.இருங்கோவேள் ஈ.வேளர்
2. இருங்கோவேள் எந்தப் பரம்பரையைச் சேர்ந்தவன்?
   அ. சோழர் பரம்பரை ஆ.பாண்டிய பரம்பரை
   இ.வேளிர் பரம்பரை ஈ.மைசூர் பரம்பரை
3. துவரை நகரம் எனச் சங்க இலக்கியங்கள் குறிக்கும் நகரம் எது?
   அ. பறம்புமலை ஆ.பிரான்மலை
   இ.மைசூர் அருகே உள்ள துவாரகா ஈ. மைசூர்
4. எருமை நாடு எனச்சங்க இலக்கியங்கள் குறிப்பது____________
   அ. துவாரகா ஆ.மைசூர் இ.பறம்பு நாடு ஈ.துவரை
5. எருமை நாடு என்பது___________
   அ. பழந்தமிழ் பெயர் ஆ.கன்னட பெயர்
   இ.வடமொழிப் பெயர் ஈ.எதுவும் இல்லை

**II அ. பின்வரும் உரைநடை பத்தியைப் படித்து கொடுக்கப்பட்ட பலவுள் தெரிவு செய் வினாக்களுக்கு ஏற்ற விடையை எழுதுக.** **5×1=5**

இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றில் 1906ஆம் ஆண்டு, மிகவும் சிறப்புடையதாக கருதப்படுகிறது. அந்த ஆண்டில்தான் காந்தியடிகள் சத்தியாகிரகம் என்று அறப்போர் முறையில் தென்னாப்பிரிக்காவில் தொடங்கி வைத்தார். தனித்து நோக்கினாலும் வரலாற்றுச் சிறப்புக்குரிய நிகழ்வுகள் பல அவ்வாண்டில் நடைபெற்றன. வ உ சிதம்பரனார் ஆங்கிலேயர்களுக்கு எதிராக சுதேசிக் கப்பல் நிறுவனத்தை தொடங்கினார். இத்தகைய சிறப்புள்ள ஆண்டில் ஜூன் 26ஆம் நாள் சென்னை ஆயிரம் விளக்கு வட்டம் சால்வன் குப்பம் என்னும் பகுதியில் நான் பிறந்தேன். நான் பிறந்த வட்டத்துக்கு ஆயிரம் விளக்கு என பெயர் இருப்பினும் என்னை பெற்றெடுத்த குடும்பம் வறுமை இன்னும் இருள் சூழ்ந்து தான். என் தந்தையார் பெயர் பொன்னுசாமி. அன்னையின் பெயர் சிவகாமி. பெற்றோர் எனக்கு இட்ட பெயர் ஞானப்பிரகாசம் ஆனால் சரபையர் என்ற முதியவர் ஒருவர் என்னுடைய பெயரை மாற்றி சிவஞானி என்று அழைத்தார்.

பின்னாளில் அவர் எனக்கிட்ட அழைத்த சிவஞானி என்னும் பெயரே சிறிது திருத்தத்துடன் சிவஞானம் என்று நிலைபெற்றது.

**வினாக்கள்**

1.இந்திய விடுதலைப் போராட்டவரலாற்றில் சிறப்புடைய ஆண்டாக கருதப்படுவது எது?
அ. 9106 ஆ.1976 இ.1937 ஈ.1926
2. காந்தியடிகள் சத்தியாகிரகத்தை எங்குத் தொடங்கினார்?
அ. தென்னமெரிக்கா ஆ.தென்னாப்பிரிக்கா இ.கனடா ஈ.இலண்டன்
3. சுதேசி கப்பல் நிறுவனத்தைத் தொடங்கியவர் யார்?
அ. திருப்பூர் குமரன் ஆ.சுப்பிரமணிய சிவா இ.நல்லகண்ணு
ஈ. வ. உ. சிதம்பரனார்
4. சிவஞானத்தின் இயற்பெயர் யாது?
அ. சிவப்பிரகாசம் ஆ.மருதையன் இ.சிவகாமி ஈ.ஞானப்பிரகாசம்
5. சிவஞான முனிவர் இட்ட பெயர் என்ன?
அ. மகாமுனி ஆ.சிவ முனி இ.சிவஞானி ஈ.தவமுனி

**(அல்லது)**

**ஆ.பின்வரும் உரைநடை பத்தியைப் படித்து கொடுக்கப்பட்ட பலவுள் தெரிவு செய் வினாக்களுக்கு ஏற்ற விடையை எழுதுக.** 5×1=5

பன்னெடுங்காலமாக மக்களால் விரும்பப்படும் மரபார்ந்த கலைகளில் ஒன்று கரகாட்டம். கரகம் என்னும் பித்தளை செம்பையோ சிறிய குடத்தையோ தலையில் வைத்து தாளத்திற்கு ஏற்ப ஆடுவது கரகாட்டம். இந்த நடனம் கரகம், கும்பாட்டம் என்றும் அழைக்கப்படுகிறது.

கரகச் செம்பின் அடிப்பாகத்தை உட்புறமாகத் தட்டி, ஆடுபவரின் தலையில் நன்கு படியும்படி செய்கின்றனர். கண்ணாடியாலும் பூக்களாலும் அழகூட்டிய கரகக் கூட்டின் நடுவில்,கிளி பொம்மை பொருந்திய மூங்கில் குச்சியைச் செருகி வைத்து ஆடுகின்றனர். இதற்கு நையாண்டி மேள இசையும் நாகசுரம், தவில், பம்பை போன்ற இசைகருவிகளும் இசைக்கப்படுகின்றன. ஆணும் பெண்ணும் சேர்ந்து நிகழ்த்தும் கரகாட்டத்தில் கில நேரங்களில் ஆண், பெண் வேடமிடு ஆடுவதும் உண்டு. கரகாட்டம் நிகழ்த்துதலில் இத்தனைபேர்தான் நிகழ்த்த வேண்டும் என்ற வரையறை இல்லை.

**வினாக்கள்**

1. மக்களால் விரும்பப்படும் கலை எது?
அ. தப்பாட்டம் ஆ.கரகாட்டம் இ.கும்மியாட்டம் ஈ.தேவராட்டம்
2. கரகாட்டம் வேறு எவ்வாறு அழைக்கப்படுகிறது?
அ. புலி ஆட்டம் ஆ.கும்பாட்டம் இ.குதிரையாட்டம் ஈ. புரவியாட்டம்
3. கரகாட்டத்தின் தலையில் எதை வைத்து ஆடுவர்?
அ. சிறியகுடம் ஆ.சிறிய பொம்மைகள்
இ.மூங்கில் குச்சிகள் ஈ. இசை வாத்தியங்கள்
4. கரகாட்டத்தில் இசைக்கப்படும் இசைக் கருவிகள் யாவை?
அ. தவில், பம்பை ஆ.மத்தளம், நாதஸ்வரம்
இ.மேளம், தவில் ஈ.சிங்கி, தப்பு
5. கரகாட்டத்தை எத்தனை பேர் ஆடுவர்?
அ. 5 ஆ 10 இ. 20 ஈ. வரையறை இல்லை

## பகுதி – ஆ இலக்கணம்

**III.சான்று தருக. (ஏதேனும் நான்கு மட்டும்)** **4×1=4**

1. முதுவேனிற்காலம்
அ. புரட்டாசி ஐப்பசி ஆ. ஆனி ஆடி இ. ஐப்பசி கார்த்திகை
2.' நீ விளையாட வில்லையா?' என்ற கேள்விக்கு உறுவது கூறல் விடை தருக.
அ. நீ விளையாடு ஆ. விளையாடவில்லை இ. கால் வலிக்கும்
3. மரபு வழு சான்று தருக.
அ. தென்னந் தோட்டம் அ. தென்னந்தோப்பு இ. கூவும் குயில்
4. வினையெச்ச தொடரை எழுதுக.
அ. பார்த்து பையன் ஆ. வரைந்த படம் இ. பாடி மகிழ்ந்தனர்
5. அன்மொழித்தொகையினை கண்டறிக.
அ. மதுரைக்குச் சென்றான் ஆ. கடிதத்தை எழுதினார் இ. சிவப்பு சட்டை பேசினார்

**IV.கூறியவாறு செய்க. (ஏதேனும் நான்கு மட்டும்)** **4×1=4**

1. பிற்பகல் 2 மணி முதல் 6 மணி வரை உள்ள சிறுபொழுதுகள்
அ. யாமம் ஆ. ஏற்பாடு இ. காலை
2.' கடைக்கு போவாயா?' என்ற கேள்விக்கு உடன்பட்டு கூறல் விடையினை எழுதுக.
அ. போக மாட்டேன் ஆ. நீயே போ இ. போவேன்
3.' நீ வந்தேன்' என்ற வழுவை வழா நிலையாக மாற்று
அ. நீ சென்றேன் ஆ. சென்றேன் இ. நீ வந்தாய்
4. 'வருக' - அடுக்கு தொடர் ஆக்கு
அ. வா வா ஆ. சென்று வருக இ. வருக வருக
5.' பாம்பு' - இருபெயரொட்டுப் பண்புத்தொகையாக்கு
அ. பாம்பு பாம்பு ஆ ஆடிய பாம்பு இ. சாரைப் பாம்பு

**V.இலக்கண குறிப்பு தருக. (ஏதேனும் நான்கினுக்கும் மட்டும்)** **4×1=4**

1. மலர் வீட்டுக்கு சென்றாள் – இது எவ்வகை மொழி
   அ. தனிமொழி ஆ. தொடர்மொழி இ. மறுமொழி
2. சொல்லிசை அளபெடையினை கண்டறிக.
   அ. கெடுப்பதும் ஆ. ஓஒதல் இ. உரனசைஇ
3. மதுரை சென்றான் – என்பது
   அ. நான்காம் வேற்றுமைத்தொகை ஆ. இரண்டாம் வேற்றுமைத் தொகை
   இ. அன்மொழித்தொகை
4. பாடினால் கண்ணகி – என்பது
   அ. வினையெச்சத் தொடர் ஆ. பெயரெச்சத் தொடர்
   இ. வினைமுற்றுத் தொடர்
5. திணை வழுவமைதி – எடுத்துக்காட்டு தருக
   அ. கபிலன் எழுதினான்
   ஆ. மாட்டை பார்த்து அம்மை வந்தாள் என கூறுவது
   இ. தென்னந்தோப்பு

**VI.கோடிட்ட இடங்களை நிரப்புக. ( அனைத்தையும் )** **5×1=5**

1. நெய்தல் நில மக்களின் பெயர்___________
அ. குறவன் குறத்தி ஆ. ஆயர் ஆய்ச்சியர் இ. பரதன் பரத்தியர்
2. ஒரு செயலில் பல அடிகளில் சிதறிக்கிடக்கும் சொற்களைப் பொருளுக்கு ஏற்றவாறு ஒன்றோடு ஒன்று கூட்டிப் பொருள் கொள்வது___________
அ. ஆற்றுநீர்ப் பொருள்கோள்
ஆ. கொண்டுகூட்டு பொருள்கோள்
இ. மொழிமாற்றுப் பொருள்கோள்
3. இலக்கண முறைப்படி பிழை உடையது எனினும் ஏதேனும் ஒரு காரணம் கருதி பிழையென்று என ஏற்றுக்கொள்ளப்படுவது___________
அ. வழுவமைதி ஆ. வழாநிலை இ. வழு
4. தொகாநிலைத் தொடர்___________ வகைப்படும்.
அ. 8 ஆ. 10 இ. 9
5. சிறப்பு பெயர் முன்னும் பொதுப்பெயர் பின்னும் இன்று இடையில்" ஆகிய" இன்னும் பண்பு உருபு தொக்கி வருவது_________
அ. இருபெயரொட்டுப் பண்புத்தொகை ஆ. பண்புத்தொகை
இ. வினைத்தொகை

## பகுதி – இ இலக்கியம்

**VII.பின்வரும் செய்யுள் பகுதியைப் படித்துக் கொடுக்கப்பட்ட பலவுள் தெரிவு செய் வினாக்களுக்கு ஏற்றவிடை எழுதுக.** **5×1=5**

சிறு தாம்பு தொடுத்த பசலைக் கன்றின்
உறுதுயர் அலமரல் நோக்கி ஆய்மகள்
நடுங்கு சுவல் அசைத்த கையள் "கைய
கொடுங்கோல் கோவலர் பின் நின்று உயிர்த்த
இன்னே வருகுவர், தாயார்" என்போன்
நன்னர் நன்மொழி கேட்டனம்.

**வினாக்கள்**

1. இப்பாடல் இடம் பெற்றுள்ள நூல் எது?
அ. கார் நாற்பது ஆ. இன்னா நாற்பது இ. புறநானூறு ஈ. முல்லைப்பாட்டு
2. இப்பாடலை இயற்றியவர் யார்?
அ. காவிரி பூம்பட்டினத்துப் பொன்வணிகனார் ஆ. ஓதலாந்தையார்
இ. அம்மூவனார் ஈ. நப்பூதனார்
3. சிறு தாம்பு கயிற்றால் கட்டப்பட்டிருந்தது எது?
அ. இளங்கன்று ஆ. இளம் பசு இ. இளங்காளை ஈ. இளம் எருது
4. உறுதுயர் - இலக்கண குறிப்பு எழுதுக
அ. பண்புத்தொகை ஆ. வினைத்தொகை இ. உரிச்சொல் ஈ. மூன்றாம் வேற்றுமை
5. இப்பாடல் எந்த பாவகையால் இயற்றப்பட்டது?
அ. வெண்பா ஆ. ஆசிரியப்பா இ. கலிப்பா ஈ. வஞ்சிப்பா

**VIII.பின்வரும் பத்தியை படித்துத் தொடர்ந்து வரும் பலவுள் தெரிவு வினாக்களுக்கு ஏற்ற விடைகளை எழுதுக.** **5×1=5**

தமிழர் பண்பாட்டில் வாழை இலைக்கு தனித்த இடம் உண்டு. தலை வாழை இலையில் விருந்தினருக்கு உணவளிப்பது நம் மரபாகக்

கருதப்படுகிறது. நம் மக்கள் வாழை இலையின் மருத்துவ பயன்களை அன்றே அறிந்திருந்தனர். தமிழர்கள் உணவு பரிமாறும் முறையை நன்கு அறிந்திருந்தனர் இடப்பக்கம் வாழை இலையின் குறுகலான பகுதியும் வலப்பக்கம் இலையின் விரிந்து பகுதியும் வரவேண்டும். ஏனென்றால் வலது கையால் உணவு உண்ணும் பழக்கம் உடையவர்கள் நாம். இடது ஓரத்தில் உப்பு, ஊறுகாய், இனிப்பு முதலான அளவில் சிறிய உணவு வகைகளையும் வலது ஓரத்தில் காய்கறி, கீரை, கூட்டு, முதலான அளவில் பெரிய உணவு வகைகளையும் நடுவில் சோறும் வைத்து எடுத்து உண்ண வசதியாக பரிமாறுவார்கள். மனமறிந்து அவர்கள் விரும்பிச் சாப்பிடும் உணவு வகைகளை பரிவுடன் பரிமாறுவர்.

**வினாக்கள்**

1. தமிழர் பண்பாட்டில் எதற்கு தனித்த இடம் உண்டு?
   அ. வாழை இலை ஆ.மாவிலை இ.தென்னங்கீற்று ஈ.வேப்பிலை
2. வாழை இலையின் ____________ பயன்கள் பற்றி தமிழர் அறிந்திருந்தனர்.
   அ. மருத்துவம் ஆ.அறிவியல் இ.விருந்தோம்பல் ஈ. வானிலை
3. சிறிய உணவு வகைகளை எங்கே வைக்க வேண்டும்?
   அ. இடது பக்கம் ஆ.வலது பக்கம் இ.இடது ஓரம் ஈ.வலது ஓரம்
4. இலையில் இடது பக்கத்தில் எவ்வகை உணவுகளை வைத்தல் வேண்டும்?
   அ. உப்பு ஊறுகாய் இனிப்பு ஆ. காய்கறி கீரை கூட்டு
   இ.சோறு வகைகள் ஈ.இறைச்சி
5. வலது ஓரத்தில் எவ்வகை உணவுகளை வைக்கவேண்டும்?

அ. உப்பு ஊறுகாய் ஆ. காய்கறி கீரை கூட்டு
இ. சோறு வகைகள் ஈ. இறைச்சி

**IX.பின்வரும் கோடிட்ட இடங்களைத் திருக்குறள் சீர்களால் நிரப்புக. 1×4=4**

1.குற்றம் இலனாய்க் குடிசெய்து வாழ்வானைச்
சுற்றமாச் சுற்றும் ____________
அ. அன்பு ஆ. உலகு இ. மாண்பு

2.செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்
தியற்கை ____________ செயல்.
அ. அறிந்து ஆ. புரிந்து இ. கூறும்

3.பண் என்னாம் பாடல் கியைபின்றேல் ________________
கண்ணோட்டம் இல்லாத கண்
அ. பொன் என்னாம் ஆ. கண் என்னாம் இ. இசை என்னாம்

4. ___________ திருவினையாக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்
அ. பயிற்சி ஆ. கல்வி இ.முயற்சி

**X.பின்வரும் செய்யுள் வினாக்களுள் எவையேனும் இரண்டுனுக்கு விடை தருக. 2×3=6**

1. அயோத்தியா காண்டம், கங்கைப் படலம் பாடலில் இடம்பெற்றுள்ள கம்பனின் நயத்தை விளக்குக.
2. மன்னருக்கு மரியாதை செய்ததையும், மன்னிப்பு வேண்டியதையும் விவரித்து எழுதுக.

3. கானவர்களின் ஊரை அடைந்து பிறகு நடப்பதாகக் கூத்தர்கள் கூறுவது யாது?
4. காற்றே வா! என்னும் பாடலில் பாரதியார் பாடும் செய்திகளை எழுதுக.

**XI.எவையேனும் மூன்று உரைநடை வினாக்களுக்கு விடையளி.** **3×4=12**

1. இளம் பயிர் வகை ஐந்தின் பெயர்களைத் தொடரில் அமைத்து எழுதுக.
2. காற்று மனிதனால் எவ்வாறு மாசடைகிறது என்பதைப் பாடத்தின் வழிநின்று விளக்குக.
3. தமிழர்களும் விருந்தோம்பல் பண்பினை உடையவராக இருந்தமையைப் பாடத்தின் வழிநின்று விளக்குக.
4. மெய்நிகர் உதவியாளர் யார்?
5." போலச்செய்தல்" பண்புகளைப் பின்பற்றி ஆடப்படும் ஆட்டம் எது விளக்குக.

**XII.பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒரு துணைப்பாட கட்டுரை எழுதுக.** **1×7=7**

1. உரைநடையின் அணிநலன்கள்
2. விண்ணைத் தாண்டிய தன்னம்பிக்கை
3. பாய்ச்சல்

**XIII.கீழ்க்காணும் காட்சியை கண்டு கவினுற எழுதுக.** **1×3=3**



**XIV.பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்றுக்கு விடையளி.** **1×6=6**

1. உமது பகுதியில் பொதுமக்களுக்கு இடையூறாக இருக்கும் விளம்பர பலகைகளை அகற்ற கோரி காவல்துறை ஆய்வாளருக்கு கடிதம் வரைக.

2. மரம் வளர்ப்பின் அவசியம் குறித்து நண்பனுக்கு / தோழிக்கு கடிதம் எழுதுக.

[ உமது முகவரி: நளன் / நளினி, எண் 110, கம்பர் சாலை, போரூர், சென்னை- 110

**XV.ஏதேனும் ஒரு பகுதியின் குறிப்புகளைப் பயன்படுத்திக் கட்டுரை ஒன்று எழுதுக.** **1×6=6**

1. முன்னுரை- அரிதரிது மானிடராய் பிறத்தல்- வைகறையில் துயில் எழல்- உணவு உட்கொள்ளும் தன்மை- உணவு கட்டுப்பாடு- சுற்றுப்புறம்- முடிவுரை.

2. முன்னுரை- மானுட மேன்மைக்கான வழிகள்- தன்னம்பிக்கை முதற்படி ஓய்வில்லா உழைப்பு இரண்டாம் படி- விடா முயற்சியும் ஊக்கமும் அடுத்தபடி- செயலை திட்டமிடு- திட்டமிட்டதை செயல்படுத்து- முடிவுரை.

3. முன்னுரை- ஓரறிவு முதல் ஆறறிவு வரை- உலகில் முதலில் தோன்றியவை- மரம் வளர்ப்போம்- அனைத்து உயிர்களுக்கும் தாயானவள் மரங்கள்- பிற பயன்கள்- மரம் வளர்த்து மனிதம் வளர்ப்போம்.